நாள் : ....

கொங்கராயபாளையம் ஊராட்சி மன்றத் தலைவர் அவர்களின் நடவடிக்கை

முன்னிலை : திரு. க.ராஜா

கடித எண்: /2023 நாள்: 19.2.2024

பொருள் : மனைப்பிரிவு – கள்ளக்குறிச்சி வட்டம், தியாகதுருவம் ஊராட்சி ஒன்றியம் கொங்கராயபாளையம் கிராமம், சர்வே எண்.381/3, 382/1சி2பி1எ1எ மனைப்பிரிவிற்கான இறுதி ஒப்புதல் வழங்கி – உத்திரவிடுதல் – சார்பு.

பார்வை :

1. அரசாணை எண்.79 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை UD (3) நாள் : 23.09.2020
2. நகர் ஊர்மைப்பு உதவி இயக்குநர், கள்ளக்குறிச்சி மாவட்டம், விழுப்புரம் அவர்களின் இணையதள வழி எண். 4E1EEZDI (வி.மா) எண்.81/2023 நாள்:29.11.2023
3. கொங்கராயப்பாளையம் ஊராட்சி தீர்மான எண். 86 நாள்: 19-2-2024.
4. தானப்பத்திரம் எண்:2580 தேதி:22.11.2023
5. ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, விழுப்புரம் வங்கி கருவூல செலுத்துச் சீட்டு (இணையதளம் வாயிலாக) கட்டணம் ரூ.1000/- ஸ்டேட் வங்கி கணக்கு எண்.20231207019155 நாள்:

உத்தரவு :-

கள்ளக்குறிச்சி வட்டம், கொங்கராயபாளையம் ஊராட்சி, தியாகதுருவம் பனமலை கிராம 381/3, 382/1சி2பி1எ1எ-ல் 131-செண்டும் (5314 சதுர மீட்டர்) பரப்பளவு கொண்ட இடத்தினை புதிய மனைப் பிரிவுகளாக பிரித்திட பார்வை 1-ல் காணும் அரசாணையில் தெரிவித்துள்ள வழிகாட்டு நெறிமுறைகளின் படியும், பார்வை 2–ல் காணும் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், விழுப்புரம் அவர்களின் நடவடிக்கையின் வாயிலாக ஒப்புதல் கடிதம் வரப்பெற்றுள்ளது.

பார்வை எண்.5–ல் காணும் விபரப்படி புன்செய் வகைப்பாட்டில் இருந்த மனையாக மாற்ற அனுமதி கோரும் இடத்தில் மேலும் சந்தை மதிப்பில் 131 செண்ட மதிப்பு ரூ.3,00,000/- இதில் 3% தொகை நில பயன்மாற்ற கட்டணமாக ரூ.30,000/- ஸ்டேட் வங்கியில் 2023/2070/3091 செலுத்தி அதற்குண்டான ஆவணங்கள் பின்வரும் விபரப்படி அலுவலகத்தில் சமர்ப்பிக்கப் பட்டுள்ளது.

அரசு தலைப்பு :

வ.எண்.	விஸ்தீர்ணம்	சந்தை மொத்த மதிப்பு (ஏக்கரில்)	3% நிலமாற்று கட்டணம்
1	130 செண்டு 5314 சதுர மீட்டர்	ரூ.3,00,000/-	ரூ.30,000/-

நிபந்தனைகள்:-

1. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலமைனக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானது என அறிவிக்கப்பட்டு மனைப்பிரிவி ஒப்புதல் வழங்கப்பட்டு உள்ளது.

2. மனைப்பிரிவில் அமையும் மனையில் கட்டிடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டிடத்திற்கு நகர் ஊரமைப்பு துறை மற்றும் ஊரக வளர்ச்சிதுறை அனுமதி பெற வேண்டும் மேலும் நீர் நிலைகள் மற்றும் அரசுக்கு சொந்தமான இடங்கள் என தெரியவந்தால் எவ்வித முன்னறிவிப்புமின்றி அனுமதி ரத்து செய்யப்படும்.

3. மேற்படி மனைப்பிரிவிற்கு ஊரக வளர்ச்சித்துறையில் இறுதி ஒப்புதல் அனுமதி வழங்கப் பட்டுள்ளது என்பதால் மனைப்பிரிவிற்கான இட உரிமம் தொடர்பாக வில்லங்கள் ஏதேனும் இருப்பின் உரிய துறையினால் பரிசீலித்து முடிவு எடுக்க வேண்டும்.

4. மேற்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு கள்ளக்குறிச்சி வட்டம், தியாகதுருவம் ஊராட்சி ஒன்றியம், கொங்கராயபாளையம் கிராமம் மனைப்பிரிவு சர்வே எண்கள்.381/3, 382/1சி2பி1எ1எ (5314 சதுர மீட்டர்) ஆக மொத்தம் 130 செண்டு பரப்பளவு கொண்ட பரப்பளவில் அமைந்துள்ள .... மனைகளுக்கு மட்டும் இறுதி ஒப்புதல் அளித்து உத்திரவிடப்படுகிறது.

தலைவர்
ஊராட்சி மன்ற தலைவர்
கொங்கராயபாளையம் ஊராட்சி

பெறுதல்:

ர.மாரிமுத்து
த/பெ.ரங்கசாமி
முருகன் கோவில் தெரு,
கண்டாச்சிமங்கலம் கிராமம்,
கள்ளக்குறிச்சி வட்டம்,
கள்ளக்குறிச்சி மாவட்டம்.

நகல் : உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) கள்ளக்குறிச்சி அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

நகல் : உதவி இயக்குநர் (நகர் ஊரமைப்பு) கள்ளக்குறிச்சி அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

நகல் : சார்பதிவளார், சார்பதிவளார் அலுவலகம், நகலூர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

நகல் : வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவகலம், கள்ளக்குறிச்சி அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.